# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.88/2025

## அ.சா. 8 (LW 8)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. கணேசன்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | பழனி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **25.08.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜரில்லை. 3 ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் நெட்டுத்தெரு முனிசிபல் காலனியில் குடியிருந்து வருகிறேன். திண்டுக்கல் நகராட்சியில் தூய்மை பணியாளராக வேலை செய்கிறேன். கடந்த 3, 4 வருடத்திற்கு முன்பாக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு போன போது கையெழுத்து கேட்டதால் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரிலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். மேற்படி மகஜர், அத்தாட்சியில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று தெரியாது. போலிசார் கையெழுத்து கேட்டதால் போட்டேன். வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. பார்வைமகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1 வது கையெழுத்துக்கள் மட்டும் என்னிடம் காட்டப்படும் **அ.த.சா.ஆ.5 மற்றும் அ.த.சா.ஆ.6.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் நெட்டுத் தெருவில் பிறந்தது முதலே வசித்து வருகிறேன். எங்கள் ஊர் நாட்டாமை பெயர் தெரியாது. இறந்து போன மாசிலாமணியை தெரியும். அவர் இறந்ததை பார்ப்பதற்காகத்தான் நான் அரசு மருத்துவமனை சென்றேன் என்றால் சரிதான். அஜித்குமாரை தெரியாது. போலிசார் விசாரணையில் 19.03.2019 அன்று அதிகாலை 00.15 மணிக்கு நானும் எங்கள் தெருவை சேர்ந்த கார்மேகம் என்பவரும் ஆர்.எஸ் ரோடு என்எஸ் கம்யூனிட்டி ஹால் முன்பு மாசிலாமணி இறந்த

கிடந்த இடத்திற்கு வந்த போது நகர் வடக்கு காவல் ஆய்வாளர் மாசிலாமணி இறந்த வழக்கு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடமும், மகஜரும் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல. பின்னர் அதே தேதியில் 01.30 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து இரத்தம் பட்ட மண் சிறிதளவும் இரத்தம் படாத மண் சிறிதளவும் எங்கள் முன்பு அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் அதில் நான் கையெழுத்திட்டேன் என போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எனக்கு தெரிந்த காரணங்களுக்காக உண்மையை மறைத்து எதிரிகள் ஒரே ஏரியாவை சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளை வழக்கிலிருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. .

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.</u>**

**<u>மறு விசாரணை - இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.08.25 20:12:21 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.